# 15-09-2023 செய்தி

## உரிமைத் தொகைத் திட்டமும் பெண்களுக்கு அதிகாரமளித்தலும்

**மாதம் 1000**

- குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.5 லட்சத்துக்கும் குறைவாக உள்ள குடும்பங்களின் இல்லத்தரசிகள்.
- ஐந்து ஏக்கருக்கும் குறைவான நன்செய் நிலம், 10 ஏக்கர் மானாவாரி நிலம் வைத்திருக்கும் குடும்பத் தலைவிகள் ஆகியோருக்கு இத்திட்டத்தின் மூலம் மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்படுகிறது.

**பாலினச் சமத்துவம்**

- ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) கணக்கிடப்படுவதில்லை என்பதில் முரண்பாடு உள்ளது. இதன் பொருள் என்னவென்றால், பெண்கள் விறகு சேகரிப்பது, சுயதொழில் போன்ற பலவிதமான செயல்பாடுகள் மற்றும் குழந்தைப் பராமரிப்பு, சமையல், சலவை, சுத்தம் செய்தல் போன்ற பராமரிப்பு வேலைகள் உற்பத்தியற்றவையாகக் கருதப்பட்டு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கணக்கில் கொள்ளப்படவில்லை.

**சமத்துவம் சாத்தியமா**

- நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் அமர்த்ய சென்னின் திறன்கள் அணுகுமுறையானது (Capability Approach) வேலைவாய்ப்புக்கு அதன் பொருளாதார மதிப்பைவிட ஒரு உள்ளார்ந்த மதிப்பு உள்ளது என்று கூறுகிறது.
- பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்பது பணம் சம்பாதிப்பது மட்டுமல்ல, சுதந்திரம், மரியாதை, ஆண்களுக்குச் சமமாக நடத்தப்படுதல், முடிவெடுக்கும் ஆற்றல் ஆகியவற்றைப் பற்றியது.
- வேலைவாய்ப்பு என்பது அத்தகைய திறன்களை உணரும் ஆற்றலை வழங்குகிறது.
- இந்த ஊதியத் திட்டம் வேலைவாய்ப்புடன் வரும் அத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தாது. மாறாக, பெண்களைக் குடும்பப் பராமரிப்பாளர்களாக வரையறுக்கும் ஆணாதிக்க நெறிமுறைகளை வேரூன்றச் செய்து, பாலினச் சமத்துவத்தில் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைத் தடுக்கும் சாத்தியம் உள்ளது.

**மாற்று அணுகுமுறை**

- தொழிலாளர் படையில் பெண்களின் (15–59 வயதுக்கு உட்பட்ட) குறைந்த அளவிலான பங்கேற்பு ஆகும்.
- வரலாற்று ரீதியாகக் குறைந்த அளவிலான பெண்களின் பங்கேற்பானது, ஆழமான ஆணாதிக்கச் சமூகத்தின் தீய சுழற்சியில் சிக்கியுள்ள பெண்களின் நிலையைப் பிரதிபலிக்கிறது.
- சிறுவயதுப் பெண்களிலிருந்தே, ஆண் குழந்தைகளைவிட, குடும்ப பராமரிப்பாளரின் பாத்திரத்துக்கு இணங்குவதற்கான ஆணாதிக்கச் சமூக அழுத்தத்தை எதிர் கொள்கிறார்கள்.
- அவர்களின் திறன்களை எதிர்மறையாகப் பாதிக்கும் சமமற்ற வாய்ப்புகளை எதிர்கொள்கிறார்கள். இது சமூகத்தில் அவர்களின் கீழ்நிலையை மேலும் உறுதிப்படுத்துகிறது.
- சமீபத்திய அகில இந்திய நேர – பயன்பாடு புள்ளிவிவரங்கள் (TUS -2019), பெண்களுக்கான ஊதியம் அற்ற வீட்டு வேலைகளின் சுமை ஆண்களை விட இரண்டு மடங்கு அதிகமாக இருப்பதை வெளிப்படுத்துகிறது.
- அனைத்து மாநிலங்களிலும் குழந்தைப் பராமரிப்பு என்பது மொத்த ஊதியம் பெறாத பராமரிப்பு நடவடிக்கைகளில் முதன்மையான வேலைகளில் ஒன்றாகும்.
- தமிழ்நாட்டில் உள்ள பெண்கள், ஊதியம் பெறாத மொத்தப் பராமரிப்பு நேரத்தில் 96% குழந்தைப் பராமரிப்புக்குச் செலவிடுகிறார்கள்.

**மறுபரிசீலனை அவசியம்**

- உள்ளடங்கிய வளர்ச்சி, மேம்பாட்டை ஊக்குவிப்பதில் பராமரிப்பு சார்ந்த உள்கட்டமைப்பை ஒருங்கிணைப்பது அவசியமான ஒரு படியாகும்.
- ஏனெனில், பொருளாதார வளர்ச்சியானது அடிப்படையில் தொழிலாளர் உற்பத்தித் திறனையும் மனித மூலதனத்தையும் சார்ந்துள்ளது. இவை இரண்டும் ஊதியம் அற்ற கவனிப்பு, உழைப்பால் இனப்பெருக்கம் செய்யப்பட்டு. ஊட்டம் அளிக்கப்பட்டு, வலுப்படுத்தப்படுகின்றன.
- வளர்ச்சிக் கொள்கைப் பகுப்பாய்வில் இந்த அடிப்படை அம்சம் ஒருங்கிணைப்பட்டாக வேண்டும்.அரசு அதன் வளர்ச்சிக் கொள்கைகளைப் பாலினம் சார்ந்த கண்ணோட்டத்தில் மறுபரிசீலனை செய்து, மறுமதிப்பீடு செய்ய வேண்டும்.
- நடைமுறைக் கண்ணோட்டத்தில், கர்நாடக அரசு சமீபத்தில் அறிமுகப்படுத்திய ‘குசினா மனே திட்டம்’ ஓர் உதாரணம். இத்திட்டம் கர்நாடகத்தில் உள்ள நூறு நாள் வேலைத் திட்டத் தொழிலாளர்களுக்காக 4,000 கிரமாப் பஞ்சாயத்துகளில் குழந்தைகள் காப்பகங்கள் அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசும் இதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்தலாம்.
- மேலும், மாநிலத்தில் பரந்த பராமரிப்பு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், வலுப்படுத்தவும் அங்கன்வாடி, நூறு நாள் வேலைத் திட்டம், பிற திட்டங்கள் மூலம் குழந்தைப் பராமரிப்பு உள்கட்டமைப்பை வலுப்படுத்த அரசாங்கம் முதலீடு செய்ய வேண்டும்.
- அடிப்படையில் இவை அனைத்துக்குமே வளர்ச்சிக் கொள்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் பாலினச் சமத்துவத்தை ஒருங்கிணைக்கும் முன்னோக்குப் பார்வை தேவைப்படுகிறது.
- வளர்ச்சியின் பார்வை அனைவரையும் உள்ளடக்கியதாகவும் அதிகாரம் அளிப்பதாகவும் இருக்க வேண்டுமானால், அது பாலினச் சமத்துவம், சமூக நீதி ஆகிய இரண்டையும், ஒருங்கிணைக்கும் ஒரு மாற்றுப் பாதையாக இருக்க வேண்டும்.

## உயிரி எரிபொருள் நிலைப்பு

- குறுகிய காலத்தில் கரிம பொருளிலிருந்து உருவாக்கப்படும் எந்தவொரு ஹைட்ரோ கார்பன் எரிபொருள்
- திட, திரவ அல்லது வாயு நிலையில் இருக்கும் எந்தவொரு புதைபடிவ, பெட்ரோல் அல்லது டீசலுக்கு மாற்றாக பயன்படுத்தலாம்.

**நான்கு தலைமுறை உயிரிஎரிபொருள்**

| முதல் தலைமுறை | இரண்டாம் தலைமுறை | மூன்றாம் தலைமுறை | நான்காம் தலைமுறை |
|---|---|---|---|
| உண்ணக்கூடிய கரிமப் பொருள் | உண்ண இயலாதவை | ஆல்கா | |
| கரும்பு | கட்டை | பெரிய ஆல்கா | பைரோலைசிஸ் |
| கோதுமை | புல் | சிறிய ஆல்கா | மரபணு மாற்றப்பட்ட உயிரினம் |
| சோளம் | கழிவு | | |
| எண்ணெய் வித்து | | | |

**இந்தியாவில் உயிரி எரிபொருளின் நிலை**

- 2009 தேசிய கொள்கை – புதிய மற்றும் புதுப்பிக்கதக்க ஆற்றலுக்கான அமைச்சகம்
- 2018 – மேம்படுத்த உயிரி எரிபொருள் கொள்கை
- உயிரி எரிபொருள் தேசிய கொள்கை – கச்சா பொருளிலிருந்து உயிரிஎரிபொருள் தயாரிப்புக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
- கரும்புச்சாறு, பீட்ரூட், சோளம், சிதைந்த உணவு தானியம், மரவள்ளிகிழங்கு, சோறு.

**நோக்கம்**

- 2030க்குள் 20% எத்தனால் கலப்பு மற்றும் 5% பயோடீசல் கலப்பு

**உயிரிஎரிபொருளை ஏற்பதில் உள்ள சவால்கள்**

- குறைந்த செயல்திறன்
- நிலப்பயன்பாட்டில் தாக்கம் – உணவு தானிய உற்பத்தியில் தாக்கம்
- உயிர் பல்வகைத்தன்மை இழப்பு

**சுற்றுச்சூழல் சவால்**

- உயிரி பல்வகைத்தன்மை இழப்பு – அதிக நீர் தேவை
- ஒரு வகை தாவரமாக வளர்ப்பு – காடுகள் அழிக்கப்படும்.

**நிலைத்த பயன்பாடு**

- ஆற்றல் மாற்று ஆணையம்
  - உயிரி எரிபொருளுக்கு மாற்றாக தேர்ந்தெடுப்பதில் சிரமம்.

**சர்வதேச ஆற்றல் முகமை**

- 2050க்குள் நிகர உமிழ்வு அடைய 2030க்குள் மூன்று மடங்கு நீடித்த உயிரி எரிபொருள் பயன்பாடு வேண்டும்.
- பெரிய ஆலைகளில் உற்பத்தி செய்வதற்கு பதிலாக கச்சா பொருளுக்கு அருகில் ஏற்படுத்தலாம்.

**முன்னோக்கியப் பாதை**

- உயிரி எரிபொருளானது, ஊரக மற்றும் விவசாய மேம்பாட்டில் பணப்பயிராக நன்மை தரும்.
- உயிரி எரிபொருள் பயன்பாடு கச்சா எண்ணெய் இறக்குமதியை குறைக்கும்.
- பயன்பாடற்ற நிலம் மற்றும் நகராட்சி கழிவுகள் உரிய வகையில் பயன்படுத்தப்படும்.
- சமூக ரீதியான உயிரி எரிபொருள் விநியோகம்.
- எத்தனாலுக்கு அரசாங்க உரிய விலையை அறிவிக்க வேண்டும்.

## இ – நீதிமன்றங்கள்/ மெய்நிகர் நீதிமன்றம்

**மின்/இ–நீதிமன்றம்**

- வழக்குகளை தீர்ப்பது மற்றும் தாக்கல் செய்வது ஆன்லைனில் நடக்கிறது.
- நீதிமன்றம் தேவையை குறைக்கிறது.
- நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர் மற்றும் அவர்களின் இருப்பைக் குறைக்கிறது.

**இ–நீதிமன்ற திட்டம்**

- 2005 இந்திய நீதிமன்றங்களுக்கான தகவல் மற்றும் தொழில்நுட்ப செயல்திட்ட தேசிய கொள்கை

**அறிக்கை**

- இ – கமிட்டி, உச்சநீதிமன்றம்.

**இ–நீதிமன்ற திட்டத்தின் நோக்கம்**

- இந்திய நீதித்துறையில் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத்தை புகுத்துதல்.

**இ–கமிட்டி, உச்சநீதிமன்றம்**

- இ-நீதிமன்ற திட்டத்தை கண்காணித்தல்

**தலைவர்**

- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி

**நோக்கம்**

- அனைத்து நீதிமன்றங்களையும் இணைத்தல்
- இந்திய நீதித்துறை தகவல் தொழில்நுட்பத்தை அணுக செய்தல்
- செயல்திறனை அதிகரித்தல்
- இந்திய நீதித்துறையை. அணுகும் தன்மை, விலை குறைவு, வெளிப்படைத்தன்மை மற்றும் பதிலளிக்கும்படி மாற்றுதல்.

**இ–நீதிமன்ற திட்டத்தினை செயல்படுத்துதல்**

- நாடு முழுவதும்
- ஒவ்வொரு கட்டமாக
- கட்டம் 1 மற்றும் 2 (2007 - 15, 2015 - 19)
- அனைத்து நீதிமன்றங்களிலும் டிஜிட்டல் உள்கட்டமைப்பு
- வழக்கு மேலாண்மை முறை
- தனிப்பட்ட வழக்கு எண் பதிவேடு
- தேசிய நீதித்துறை தரவு கட்டம்
- உள் செயலாக்க கூடிய குற்றவியல் நீதி முறை

**கட்டம் – 2**

**சூழல் ரீதியான அணுகுமுறை**

- பங்குதார்கள் ஒரே நேரத்தில் தரவுகளை அணுக முடியும்
- சிறைச்சாலை முறை, நீதிமன்றம் மற்றும் சட்ட உதவி போன்றவற்றில் தரவு பரிமாற்றம்.